[1974 சனவரி 23

மதுரை-குமுளி சாலை

*104 வினு—திரு. நா. வெ. குருசாமி: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை-குமுளி சாலையினை அகலப்படுத்த திட்டமிடப் பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது வேலை துவங்கப்படும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இவ்வேலையை சேர்த்து 'மாநில அரசு வேலையாக' இதை எடுத்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. நா. வெ. குருசாமி: தலைவர் அவர்களே, இந்த மதுரை-குமுளி சாலை தார் ரோடுக்கு இரு புறமும் மிகவும் பள்ளமாக இருக்கிறபடியால், போக்குவரத்துக்கு மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. குறிப்பாக, அப்பகுதியில் செல்லும் பாண்டியன் போக்குவரத்து பஸ்களும், லாரி போன்றவைகளும் சேதப்படுகின்றன. இதனுல் டயர்கள் எல்லாம் பஞ்சராகி இடையிலே நிற்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இச்சாலையை அகலப்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அதற்காகத்தான் நான் அகலப்படுத்துவதற்காக, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இத்திட்டம் சேர்க்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்தேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: மதுரை–தேனி ரோடினுடைய ஒரு பகுதியாக, இந்த மதுரை-குமுளி சாலை இருக்கிறது. ஏற்கனவே, ஜவஹர்லால் நேரு அவர்கள் வந்தபொழுது அந்த ரோடைக் கொஞ்சம் அகலப்படுத்தினுர்கள். இப்பொழுது அந்த ரோடை அகலப்படுத்த வேண்டியது ரொம்ப அவசரமாக இருக்கிற காரணத்தாலே, வருகிற 1974-75-ல் இதற்காக எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது எப்பொழுது எடுத்துக்கொள்ளப் படும் என்று அறிய விரும்புகிறேன்.

1974 சனவரி 23]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இதற்காக மொத்தம் ரூ. 22.5 இலட்சம் செலவாகும். அது ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்க்கப்பட்டிருக்கிறது. நிதிநிலையைப் பொறுத்து எடுத்துக்கொள்வதற்கு அரசு முயற்சிக்கும்.

இரயில் பாதைகளை மாற்றியமைத்தல்

***105 வினா—திரு. வை. பாலசுந்தரம்:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலிருக்கும் மீட்டர் கேஜ் ரயில் பாதைகளை எல்லாம் பிராட்கேஜ் பாதைகளாக மாற்றக்கோரி மத்திய அரசுக்கு பரிந்துரை ஏதேனும் செய்துள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தமிழகத்தில் இருக்கும் சில மீட்டர் கேஜ் இரயில் பாதைகளை பிராட்கேஜ் பாதைகளாக மாற்றக்கோரி மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Minister for Works whether the Salem-Bangalore metre gauge lines will be converted into broad-gauge lines ?

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, we have not recommended that scheme.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே சில ரயில் பாதைகளை பிராட்கேஜாக மாற்ற வேண்டுமென்று முதலமைச்சர்கள் மாநாட்டிலே நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஐந்தாண்டு திட்டத்திலே சேர்க்க வேண்டுமென்று வற்புறுத்தினார்களே, அதில் எந்த எந்தத் திட்டங்களை மத்திய அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: எந்தத் திட்டத்தையும் மத்திய அரசு இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை. முதல்வர் அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் பரிசீலனையில் இருப்பதாகத் தான் தகவல் இருக்கிறது.

திரு. ஓ. என். சுந்தரம்: தலைவர் அவர்களே, கரூர்-திண்டுக்கல் தூத்துக்குடி அகல ரயில் பாதை ஏற்கனவே நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டது அரசுக்குத் தெரியுமா?